The Good News

# வாழ்க்கையைக் கண்டறிதல்

## விசுவாசப் பாடங்கள்



# உள்பொருள் பக்கம்


1. ஆரம்பத்தின் அடிச்சுவடுகளைத் தேடி 3
கடவுள் வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்

2. நமது அறிவின் அடிப்படை என்ன? 4
வேதத்தின் மூலமாக கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார்

3. பார்க்கமுடியாதவரல்ல ஆனால் அவரை அறிந்து கொள்ளலாம் 6
நம்மைப் படைத்தவர் தன்னை அறிமுகப்படுத்துகிறார்

4. நமது மிகப்பெரிய நியமனம் 8
கடவுள் மனிதனை அற்புதமாகப் படைத்தார்

5. உலக வரலாறு சந்தித்த பெரிய விபரீதம் 9
கடவுளுக்கு எதிராக மனிதன் செயல்ப்பட்டான்

6. நம்பிக்கை இல்லாத சூழ்நிலை 11
மனிதன் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்

7. கடவுள் இல்லாத நம்முடைய எதிர்காலம் 13
மனிதன் நித்திய அழிவை நோக்கிப் போகிறான்

8. மதபக்தி மாத்திரம் போதாது 15
இயேசுகிறிஸ்து தான் முக்கிய திறவுகோல்

9. கடவுள் நம்மோடு தொடர்பு கொள்ளுகிறார் 17
இயேசுக்கிறிஸ்து தன்னுடைய தனித்துவத்தைக் காண்பிக்கிறார்

10. கடவுளின் அன்பைக் காணமுடியும் 19
இயேசுக்கிறிஸ்து நமக்காய்த் தன்னை ஒப்புக்கொடுத்தார்

11. என்னுடைய முடிவு 20
இரட்சிப்பைத் தேடி

12. புதிய வாழ்க்கையை அனுபவிக்கவும் 22
கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல்ப்படிகள்

பதிப்பாளர் 25

# 1. ஆரம்பத்தின் அடிச்சுவடுகளைத் தேடி

## கடவுள் வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்

### அதிகமாக கேட்கப்படும் கேள்வி: கடவுள் இருக்கிறாரா?

இந்தக்கேள்வி பொதுவாக உலகத்தில் கேட்கப்படும் கேள்வி. கடவுள் இல்லை-யென்றால் அவரைத்தேடுவது பிரயோஜனமற்றது. வேதத்தில் இவ்விதமாக வாசிக்கிறோம்: விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபிரேயர் 11:6) கடவுள் இருப்பதை விஞ்ஞானியரால் நிருபிக்க முடியாவிட்டாலும் எங்களுக்கு இருக்கிற ஞானம் அறிவு உணர்வின் மூலம் கடவுள் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.



### இந்த உலகம்.

உலகம் தற்செயலாக உருவாகினதென்றால் அது புதிய கேள்விகளை உருவாக்கும் ஆனால் அதற்கு எங்களிடம் பதில் இல்லை. பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு பரவலாக உள்ளது, ஆனால் நம்புவதற்கு கஷ்டமானது. எப்படி ஒன்றுமில்லாத இடத்தில் ஜீவராசிகள் உருவாகினது? இதற்கும் எங்களிடம் பதில் இல்லை அதனால் இது ஒரு கோட்பாடாக இருக்கிறது.

### ஒரு நியாயமான விளக்கம் வேதத்தில் உள்ளது.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:1) நமது உலகம் தற்செயலான ஒரு விளைவு அல்ல. இந்தப் படைப்புக்கு பின்னால் ஒரு பெரிய ஞானம் இருக்கவேண்டும் என்று மனிதர்கள் உணருகிறார்கள். விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். (எபிரெயர் 11:3) இந்தப் படைப்பும் தொடக்கமும் முடிவும் கடவுளில் உள்ளது. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். (சங்கீதம் 33:9)

### இயற்கையின் அற்புதமான வடிவமைப்பும் இயற்கை சட்டத்தின் ஒழுங்குகளும்.

விண்வெளியிலிருந்து சிறிய உயிரினம் வரைக்கும் எல்லாம் ஒழுங்கும் கிரமமுமாக இருக்கிறது, ஆனால் அந்த ஒழுங்கும் தற்செயாலாக வந்தது அல்ல அதைப்போல இயற்கையின் சட்டங்களும் ஒருவர் இருக்கிறார் என்பதை நிருபிக்கிறது.

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. (அப்போஸ்தலர் 17:24)

## மனிதன்தான் ஒரு படைப்பாளர் இருக்கிறார் என்பதற்கு ஒரு மிகப்பெரிய அடையாளம்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதியாகமம் 2:7) மனிதன் மிருகங்களை விட மேலான தேவசாயலை உடையவன். மனிதனால் யோசிக்க, உணர அத்தோட விரும்பவும் முடியும். மனிதனுக்கு மனச்சாட்சி இருக்கிறது, அது மூலமாய் அவன் எதையும் நிதானிக்க முடியும். அத்தோடு அவன் நல்லதையும் கெட்டதையும் தெரிந்து கொள்ளமுடியும். மனதினால் சிந்திக்க முடியும் தேவன் இருக்கிறாரென்று இந்த ஆதங்கம் அவனுக்குள் இருக்கிறது. எங்கே இருந்து அவனுக்கு இந்த ஆதங்கம் வந்தது? இந்த ஆதங்கம் பரிமாணக்கோட்பாட்டால் வந்தது அல்ல, தற்செயலாகவும் வந்தது அல்ல. மனிதனும் தற்செயலாக உருவானவன் அல்ல. தாவீதுராஜா இவ்வகையாக வேதத்தில் கூறியிருக்கிறார்: நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத்துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவிற்கு நன்றாய்த் தெரியும். (சங்கீதம் 139:14)

# 2. நமது அறிவின் அடிப்படை என்ன?

### வேதத்தின் மூலமாக கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார்

## மனிதனுக்கு கடவுளைப்பற்றிய தெளிவான அறிவுகள் தேவை-யாயிருக்கிறது.

யோபு என்ற மனிதனிடம் கடவுள் வேதத்தில் இவ்வகையான கேள்விகளைக் கேட்கிறார்: தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? (யோபு 11:7) யோபுவால் இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. நம்மால் தேவனை அறிந்து கொள்ள முடியாது ஆகையால் அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தவேண்டும்.

## இயற்கையின் மூலமாக கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார்

பகலுக்கு பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. (சங்கீதம் 19:2) விண்வெளியின் விரிவும் ஒழுங்கும் அழகும் படைத்த கடவுளின் தன்மையை வெளிப்படுத்துகிறது. பூமியின் படைப்பில் கடவுள் தம்முடைய வல்லமையையும் அவருடைய ஞானத்தையும் காண்பிக்கிறார். எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவை-களினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாகக்காணப்படும், ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. (ரோமர் 1:20)

## கடவுள் மனிதனிடம் பேசுகிறார்.

உறவாடுதல் என்பது அவருடைய வார்த்தையின் மூலமாக உயிர்பெறுகிறது. கடவுள் ஒரு சிலரோடு பேசினார். தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2.பேதுரு 1:21) வேதத்தில் மாத்திரம்தான் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் முழுமையாக நிறைவேறிவருகிறது. ஆதலால் எதுவும் தற்செயலாக இருக்கமுடியாது. கடவுள் வேதத்தில் எல்லாவற்றையும் ஒரு திட்டத்தோட செய்கிறார். அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2. தீமோத்தேயு 3:17)



## எந்தப் புத்தகத்திலும் வாழ்க்கையை மாற்றும் வல்லமை இருந்ததில்லை.

வேதத்தின் சிறப்பு என்னவென்றால் ஒரு மனிதன் முன்பு இருந்த வாழ்க்கை மாற்றப்பட்டதை காணும்போது அதன் சிறப்பு தெரிய வருகிறது. ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுகொள்ளாமல், தேவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவவசனம்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது. (1. தெசலோனிக்கேயர் 2:13) கோடிமக்கள் தனிப்பட்ட அனுபவத்தில் சாட்சி கூறுகிறார்கள். கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிரு க்கிறது. (சங்கீதம் 19:8)

கடவுள் யாரென்று தெரியவிரும்பினால் அவருடைய வார்த்தையை நாம் வாசிக்கவேண்டும். தியானிக்கவும் அதில் அவர் தம்மை வெளிப்படுத்துகிறார் மாறாக தமது விருப்பங்களை பகிர்ந்துகொள்கிறார்.

# 3. பார்கமுடியாதவர் ஆனால் அவரை அறிந்து கொள்ளலாமா?

## நம்மைப் படைத்தவர் தன்னை அறிமுகப்படுத்துகிறார்

ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுளைக்குறித்த ஒரு கற்பனை இருக்கிறது. சிலர் அவரை நல்ல தாத்தாவாக தப்பைக் கண்டிக்காதவராக பார்க்கிறார்கள். சிலர் அவரை வானத்தின் நீதிபதியாகப் பார்க்கிறார்கள். மற்றும் சிலபேர்கள் கடவுளை இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட சக்தியாகப் பார்க்கிறார்கள். ஆனால் கடவுள் மாத்திரம்தான் தன்னைப்பற்றி சரியாக வெளிப்படுத்தமுடியும். பின் வரும் உதாரணங்கள் கடவுள் தம்மை எப்படி வேதத்தில் வெளிப்படுத்துகிறார் என்பதைக் காண்பிக்கிறது.



### கடவுள் பெரியவராய் இருக்கிறார்.

கடவுளைப் பற்றின பல காரியங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. ஆராய்ந்து முடியாத பெரியகாரியங்களை யும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். (யோபு 5:9) கடவுள் நம் சக்திக்கு அப்பாற்பட்டவர். மனிதனுடைய புத்தியாலும் யோசனை யாலும் அவரைப் புரிந்துகொள்ள முடியாது. இது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது, நாம் கடவுளை முழுமையாக புரிந்துகொண்டால் அவர் கடவுளாய் இருக்க முடியாது. *சர்வவல்லவரை நாம் கண்டுபிடிக்கக்கூடாது:* அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர். அவர் மகாநீதிபரர். அவர் ஒடுக்கமாட்டார். ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்படவேண்டும். தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்கமாட்டார் என்றான். (யோபு 37:23-24)

### கடவுள் ஒரு நபர்.

கடவுள் ஒரு பொருள், ஒரு சக்தி அல்லது ஒரு சிந்தனையல்ல. அவரால் சிந்திக்கவும், உணரவும் மற்றும் செயல்படுத்தவும் முடியும், இதுவெல்லாமே அவர் ஒரு நபர் என்பதைக் காண்பிக்கிறது. ஆனால் அவர் சாதாரண கடவுள் அல்லது ஒரு வகையான சூப்பர்மான் அல்ல. கர்த்தரோ மெய்யான தெய்வம். அவர் ஜீவனுள்ள தேவன், நித்தியராஜா, அவருடைய கோபத்தினால் பூமி அதிரும். அவருடைய உக்கிரகத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள். (எரேமியா 10:10)

## கடவுள் நித்தியமானவர்.

அவருக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. வேதம் இவ் வகையாகக் கூறுகின்றது: பர்வதங்கள் தோன்றும் முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அனாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். (சங்கீதம் 90:2) கடவுள் இல்லாத ஒரு காலம் இருந்தது அல்ல, அது இருக்கப்போகிறதுமல்ல. அவர் தன்னை இவ் வகையாக அறிமுகப்படுத்துகிறார். இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார். (வெளி 1:8) அவர் என்றென்றைக்கும் மாறாதவர். இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபிரெயர் 13:8) கடவுள் எப்படி இருந்தாரோ அதேபோல் அவர் என்றென்றைக்கும் இருப்பார்.

## கடவுள் சுயாதீனமானவர்.

ஒவ்வொரு உயிரினங்களும் மற்ற உயிரினங்களைச் சார்ந்திருக்கிறது, அவைகள் சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கிறது, குறிப்பாக அவைகள் கடவுளைச் சார்ந்திருக்கின்றன. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளகிறதுமில்லை. (அப்போஸ்தலர் 17:25)



## கடவுள் நீதி உள்ளவர்.

வேதம் கூறுகிறது: ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார். (ஏசாயா 30:18) கடவுள் படைப்பாளர் மாத்திரமல்ல, அவர் எங்கள் நீதிபதியாகவும் இருக்கிறார். நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம். (சங்கீதம் 97:2) அவர் இன்னும் ஒன்றையும் குறையற்ற விதமாய்த் தீர்க்கவில்லை.

## கடவுள் பரிசுத்தமானவர்.

பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களை செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? (யாத்திராகமம் 15:11) கடவுளுடைய பரிசுத்தத்தை ஒருவரும் ஒப்பிட முடியாது. கர்த்தரைப்போல பரிசுத்தமுள்ளவர் இல்லை. உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை. எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை. (1.சாமுவேல் 2:2) அவரில் ஒரு குறையும் ஒரு பலவீனமும் இல்லை. ஆதலால் கடவுள் நாமும் பரிசுத்தராயிருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. (1.பேதுரு 1:16)

### கடவுள் எல்லாம் அறிந்தவராயிருக்கிறார்.

அவருடைய அறிவு முழுமையானது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டும். (எபிரெயர் 4:13) கடவுள் நம்முடைய இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அறிந்திருக்கிறார். அதுமாத்திரமல்ல அவர் நம்முடைய எண்ணங்களை, நாம் பேசும் வார்த்தைகளை நம்முடைய செயல்களை அறிந்திருக்கிறார். அவருடைய ஞானம் முழுமையானது ஆதலால் அவரை நாம் புரிந்து கொள்ளமுடியாது. தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளில் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாத்தீர்ப்புக்கள் அளவிடப்படாதைவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! (ரோமர் 11:33)

### கடவுள் வல்லமையுள்ளவர்.

இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ (எரேமியா 32:27) ஆதலால் அவரால் எல்லாம் செய்யமுடியாது என்று அர்த்தமில்லை ஏனென்றால் அவர் பொய்சொல்லமாட்டார், அவர் துரோகமும் செய்யமாட்டார், அவர் பாவஞ்செய்யமாட்டார் தன்னை மறுதலிக்கவும் மாட்டார், அவரால் எல்லாம் செய்யமுடியும். ஆனால் அவரின் தன்மைக்கு ஏற்றபடி எல்லாம் செய்வார்.

### கடவுள் அன்பாயிருக்கிறார்.

இது நிச்சயமாக மிகவும் சந்தோஷமான வெளிப்பாடு. தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகமால் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16) அவர் தம் ஒரேபேறான குமாரன் மூலமாக உலகத்தை இரட்சித்தார். இதுதான் கடவுளின் வெளிப்படையான அன்பின் அடையாளம்.

# 4. நமது மிகப்பெரிய நியமனம்

## கடவுள் மனிதனை அற்புதமாகப் படைத்தார்

### மனிதர்கள் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுகிறார்கள்.

நாம் எதற்காக வாழ்கிறோம்? நாம் எங்கிருந்து வந்தோம்? நமது வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? நாம் இந்த உலகத்தில் பிரயோஜனமற்றவர்களாக வாழவரவில்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். பரிசுத்தமும் ஞானமும் உள்ள கடவுள் நம்மை விசேஷித்த விதமாகப் படைத்தார் என்பதை வேதம் கூறுகிறது.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார், அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:27) சூரியனையும், சந்திரனையும் நட்சத்திரங்களை யும் பார்க்கிலும் நாம் சிறியதாயிருந்தாலும் கடவுள் நம்மை விசேஷித்த உயர்வான நிலையில் வைத்திருக்கிறார்.

## நாம் மிருகங்களைப் பார்க்கிலும் சிறப்பானவர்கள்.

அதை நாம் எதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் என்றால், மனிதன் தன்னுடைய வாழ்வை தன் விருப்பத்தின்படி அமைத்துக்கொள்ள முடியும். நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 1:28) நாம் இந்த உலகத்தில் கடவுளுடைய சொந்த நிர்வாகிகள். கடவுள் எமது வாழ்க்கைக்கும் மற்ற உயிரினங்கள் மேலும் மிகப்பெரிய பொறுப்பை கொடுத்திருக்கிறார்.



## நமக்கு ஒரு விசேஷித்த மரியாதை கொடுக்கப்பட்டிருக்கிறது.

நாம் ஒவ்வொருவரும் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டிருக்கிறோம். கடவுள் நம்மை சிறியதாகிலும் குறைவாகப் படைக்கவில்லை. அதற்கு மேலாக நாம் அவரோடு ஐக்கியத்தில் வாழ நம்மை நியமித்திருக்கிறார். உதாரணமாக நம்மால் பிரார்த்தனை செய்ய முடியும் மாறாக அவரோடு இருக்கிற உறவை ஆழப்படுத்த முடியும். உலக வரலாற்றின் ஆரம்பத்தில் மனிதன் கடவுளோடு ஒரு முழுமையான ஐக்கியத்தில் இருந்தான்.

## முந்தைய காலத்தில் „அடையாள நெருக்கடி“ இருக்கவில்லை.

மனிதன் தன் வாழ்க்கையைப் பார்த்து முழு திருப்தியும் சந்தோஷமுமாயி ருந்தான். கடவுளும் அதில் முழு சந்தோஷமும் அடைந்திருந்தார். கடவுள் படைப்பை முடித்த பிறகு எல்லாம் நன்றாய் இருக்கிறதென்று சொன்னார் என்பதை வேதம் கூறுகிறது. அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாய் இருந்தது. (ஆதியாகமம் 1:31) முதல் மனிதன் ஏதேனில் கடவுளின் கட்டளைக்கு கீழ்படிந்தபோது அவன் சந்தோஷமாய் அவரோடு முழு ஐக்கியத்தோடு வாழ்ந்தான். மனிதனுக்கு தான் யாரென்பதையும் தான் ஏன் இந்த உலகத்தில் வாழ்கிறேன் என்பதையும் நன்றாய் புரிந்து கொண்டான். வாழ்க்கையைப்பார்த்து திருப்தியும் சந்தோஷமுமாயிருந்தான்.

இன்றைய சூழ்நிலை வேறாயிருக்கிறது. ஏன் அப்படி? என்ன நடந்தது?

# 5. உலக வரலாறு சந்தித்த பெரிய விபரீதம்

## கடவுளுக்கு எதிராக மனிதன் செயல்ப்பட்டான்

### மனிதன் சந்தித்த பெரிய விபரீதம் என்ன?

செய்திகளில் தொலைக்காட்சிகளில் வானொலிகளில் நமது உலகம் ஒழுங்கற்று போகிறது என்பதை தெரியப்படுத்துகின்றது. உலகத்தின் வன்முறை, அநீதி, குழப்பங்கள், தோல்விகளைப்பற்றி புகார் எழுப்பப்படுகிறது. நாம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற சம்பவத்தின் உண்மையான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். வேதம் கூறுகிறது: இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவம்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)



### கடவுள் ஓரே ஒரு கட்டளை கொடுத்தார்.

நம்முடைய முன்னோர்கள் முதல் மனிதர்கள் (ஆதாமும் ஏவாளும்) முழு சுதந்தரத்தில் வாழ்ந்தார்கள். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதியாகமம் 2:17) ஆகவே கடவுள் ஆதாமும் ஏவாளும் இருந்த சுதந்தரத்துக்கு ஏற்றதாய் அவர்களைச் சோதித்தார். பிசாசு ஏவாளை வஞ்சித்து கடவுளுடைய கட்டளைக்கு எதிராகச் செயல்பட வைத்தான். அப்பொழுது ஸ்திரியானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். (ஆதியாகமம் 3:6)

### அதே நேரத்தில் “பாவம் உலகத்தில் வந்தது”.

ஆதாமும் ஏவாளும் தெரிந்தும் கீழ்படியாமற்போனபடியால் அவர்கள் கடவுளிடம் இருந்து பிரிக்கப்பட்டார்கள். திடீரென்று கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு பெரிய சுவர் உருவாகினது. கடவுளை நேசிக்கிறதற்குப் பதிலாய் மனிதன் இப்போது அவரைப்பார்த்து அஞ்சினான். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் அவர்கள் கேட்டார்கள் அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். (ஆதியாகமம் 3:8) சந்தோஷமாய் பாதுகாப்பாய் வாழவேண்டிய மனிதன் பாவத்தினால் பயத்தோடு வாழ்ந்தான்.

### பாவத்தின் விளைவு பிரிவு.

கடவுள் இவ்வகையாகக் கூறினார், நாம் கீழ்ப்படியாமல் போகும்போது அவரோடு இருக்கிற தொடர்பு துண்டிக்கப்படுமென்று. அதேபோலத்தான் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நடந்தது. இந்தக் கொடுரமான சமயத்தில் நாம் கடவுளிடம் இருந்து பிரிக்கப்பட்டுள்ளோம் மாறாக நம்முடைய ஆத்துமா மரித்தது. அதின் இறுதிவிளைவாக சரீரமரணம் உலகத்தில் வந்தது. அதுமாத்திரமல்ல ஆதாமும் ஏவாளும் தம் பாவசுபாவத்தை நமக்கு தந்துவிட்டார்கள். இந்தநாள்வரை. இப்படியாக, ஓரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12) குறிப்பாக “எல்லாருக்கும்” என்ற வார்த்தையைக் கவனிக்கவேண்டும். அதில் நாமனைவரும் சேர்க்கப்பட்டிருக்கிறோம். நாம் எல்லோரும் பாவிகள் நாம் அனைவரும் ஓருநாள் மரிக்கவேண்டும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. (1. யோவான்1:8) நம்முடைய சொந்த வாழ்க்கையும் வேதத்தின் வசனங்களும் நாம் பாவிகள் என்பதை நிரூபிக்கிறது.

### கடவுளை மகிழ்ச்சிப்படுத்துகிற வாழ்க்கையை நாம் வாழ்கிறோமா?

நாங்கள் நேர்மையான அன்பான சுயநலமில்லாதவர்களாக வாழ்கிறோமா? கடவுளிடம் இந்தக்கேள்விக்கு பதில் இருக்கிறது. நாமும் உண்மையாய்ச் சிந்தித்தால் நம்மாலும் இந்த கேள்விக்கு பதில் அளிக்கமுடியும். எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி (ரோமர் 3:23) எனெனில் நாங்கள் எடுத்த சொந்த முடிவாலும் தங்கள் நடக்கைகளினாலும் ஓவ்வொரு மனிதனும் தன்னுடைய பிறப்பிலிருந்து இயற்கையாகவே ஒரு பாவி. நாங்களும் இந்த உண்மையையும் அதின் விளைவுகளையும் புரிந்துகொள்ளவேண்டும்.

# 6. நம்பிக்கை இல்லாத சூழ்நிலை

## மனிதன் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்

### மரணத்துக்கு ஓப்புவிக்கப்பட்டவன்

ஒரு வியாதியை நாம் கண்டுபிடிக்கும்போது நாம் கேட்கும் முதல் கேள்வி “இது பொல்லாத வியாதியா? “ஆனால் இந்தக் கேள்வியை நம்முடைய ஆவிக்குரிய வியாதியை (பாவம்) பற்றி அவசியம் கேட்கவேண்டும். நாம் பாவி களென்பதை நம்மால் ஓத்துக்கொள்ள முடியும். ஆனால் அதின் உண்மையான அர்த்தத்தை நாம் அறிந்துகொள்ள முடியாது. நாம் மனிதர்கள் பொதுவாக முழுமையற்றவர்கள் என்று சிந்திக்கிறோம் அல்லது நாம் “எல்லோரும் தப்புச்செய்கிறோம்” என்ற வசனத்துக்குப் பின்னால் ஓளிந்துகொள்ளுகிறோம்.

இந்த விளக்கங்கள் மூலமாய் நாம் ஒரு முக்கிய கேள்வியைத் தவிர்த்துக்கொள்கிறோம். நம்முடைய நிலை எவ்வளவு மோசமாயிருக்கிறது? வேதம் அதைப்பற்றிய தகவலை நமக்கு சொல்கிறது.



## வேதாகமம் சொல்கிறது: நாம் பாவமுள்ளவர்கள்

நம்மால் நல்லது செய்ய முடியாதென்று அர்த்தமில்லை. வேதம் இவ்வகையாகக் கூறுகிறது பாவம் நம்முடைய ஒவ்வொரு அம்சத்திலும் இருக்கிறது – நம் சிந்தனையில், நம் உணர்வில், நம் விருப்பத்தில் நம்முடைய மனசாட்சியில். எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (எரேமியா 17:9) அடிப்படைப் பிரச்சனை வந்து நாம் எந்தசூழ்நிலையில் என்னசெய்தோம் என்பதல்ல முக்கிய பிரச்சனைஎன்னவென்றால் நாம் மனிதர்கள். நாம் தினம் தினம் பாவஞ்செய்கிறோம் ஏனெனில் நம் சொந்த இயற்கை நம்மை மயக்கிவைத்திருக்கிறது. எப்படியெனில், மனுஷனுடைய இருதயத்திற் குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசையும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். (மாற்கு 7:21-22)

## கடவுளுடைய பார்வையில் ஒவ்வொரு பாவமும் மோசமானது.

இந்த வசனத்தைக் கவனிப்போம் ஏனெனில் இந்த வசனம் பல பகுதிகளை காண்பிக்கிறது, குறிப்பாக நம்முடைய எண்ணங்களும், வார்த்தைகளும் செயல்களும். சிலநேரங்களில் நாம் கொலை மற்றும் களவு போன்றவற்றைத்தான் நாம் பாவம் என்று நினைக்கிறோம். ஆனால் வேதம் பாவத்துக்கு ஒரு எல்லையைப் போடவில்லை அத்தோடு நமக்கு உரிமையையும் தரவில்லை. கடவுளுடைய முழுமையான தரத்தில் இல்லாத எல்லாம் பாவம். எல்லாம் முழுமையற்ற பேச்சு செயல் அல்லது சிந்தனைகள் பாவமாயிருக்கிறது. என் இருதயத்தை சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்? (நீதிமொழிகள் 20:9) நீங்கள் சொல்வீர்களா ?

### பாவம் கடவுளுடைய ஆட்சிக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் எதிராயிருக்கிறது.

பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1.யோவான் 3:4) ஒரு கட்டளையும் நம்மைப் பொய்சொல்ல ஏமாற்ற தவறாய்ச் சிந்திக்க அல்லது பாவம் செய்ய வற்புறுத்தவில்லை, ஏனெனில் இது நம்முடைய சொந்தத்தீர்மானம். நாம் கடவுளின் நல்ல எதிர்பார்ப்புகளை வரம்புமீறி அவரை அவமதித்தால் அவர் நம்மை சும்மா விடமாட்டார். தேவன் நீதியுள்ள நியாதிபதி. அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினம் கொள்ளுகிற தேவன். (சங்கீதம் 7:11) கடவுள் பாவத்தை நிச்சயம் தண்டிப்பார். நம்முடைய பாவத்தின் தண்டனையை நாம் இந்த வாழ்க்கையில் அனுபவிக்கலாம் ஆனால் முழுமையான தண்டனையை நம்முடைய இறப்புக்குப் பிறகு நியாயத்தீர்பின் நாளில் வரும். ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:12)

# 7. கடவுள் இல்லாத நம்முடைய எதிர்காலம்

## மனிதன் நித்திய அழிவை நோக்கிப் போகிறான்

மனிதனின் மரணத்தின் பின் என்ன நடக்கும் என்பதைக்குறித்து பல கருத்துக்கள் இருக்கிறது. சிலர் மரணத்துக்குப்பின் எல்லாம் முடிந்ததென்று நினைக்கிறார்கள். சிலர் எல்லா மனிதர்களும் சொர்க்கத்துக்குப் போவார்கள் என்று கூறுகிறார்கள். மற்றவர்கள் நம்முடைய ஆத்துமாவைக் கழுவிச் சொர்க்கத்துக்குத் தயார்ப்படுத்துகின்ற ஒரு இடம் இருப்பதை நம்புகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்களை குறித்து வேதம் எதுவும் கூறவில்லை.

### கடவுளின் வார்த்தைகள் சரியாகவும் தெளிவாகவும் இருக்கிறது.

அன்றியும், ஓரேதரம் மரிப்பதும், பின்பு நியாத்தீர்ப்பு அடைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே. (எபிரெயர் 9:27) கடவுளோடு உறவில் இருக்கிற ஒவ்வொருவரும் சொர்க்கத்தில் ஒரு நித்திய வாழ்க்கையை கடவுளோடு வாழப்போகிறார்கள். கடவுளுடைய உறவில் இல்லாதவர்களுக்கு ஒரு வேறு நித்திய இடம் காத்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய சந்நிதிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். (2.தெசலோனிக்கேயர் 1:10) அந்த இடத்தை வேதம் நரகம் என்று கூறுகிறது.



## நரகம் உண்மையானது.

நரகம் மனிதர்களின் ஒரு கண்டுபிடிப்பு அல்ல. வேதம் சொர்க்கத்தைப்பற்றியும் நரகத்தைப்பற்றியும் பல தடவைகள் கூறுகின்றது. இயேசு அந்தக் காலத்தில் இருந்த பயபக்தியுள்ள மனிதர்களிடம் இவ்வகையாகக் கேட்டார்: நரககாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவீர்கள்? (மத்தேயு 23:33) இயேசு இந்தக்கேள்வியை பலமுறை கேட்டார். நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன். கொலை செய்தபின்பு நரகத்திலே தள்ள வல்லமை யுள்ளவருக்குப் பயப்படுங்கள். ஆம் அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூாக்கா 12:5)

## நரகம் பயங்கரமானது.

நரகத்தைக் குறித்துப் பல படங்கள் இருக்கிறது. நாம் காணும் படங்களில் ஓரே இடத்தைக் காண்பிக்கிறது. குறிப்பாக அந்தப் படங்கள் இருளையும் நெருப்பையும் பெரிதாகக் காண்பிக்கிறது. அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத்தேயு 13:42) இந்தக் கடுமையான வார்த்தைகள் உண்மையாயிருக்கிறது. அங்கிருக்கிற மனிதர்கள் கடவுளின் சாபத்திற்குள்ளானவர்கள். அங்கு நல்லதென்று ஓன்றுமில்லை மற்றும் இளைப்பாறுதலும் அங்கு இல்லை.

## நரகம் நித்தியமானது.

நரகத்திலிருந்து ஒருவரும் வெளியே செல்ல முடியாது. அது என்னத்தைக் கூறுகிறதென்றால் மனிதனின் சாவுக்குப்பிறகு இவனால் நரகத்திலிருந்து சொர்க்கத்துக்குப் போகமுடியாது. அதுவுமல்லாமல், இவ்விடத்தில் இருந்து உங்களித்திற்கு கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்கு கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குள்ளும் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று என்றான். (லூாக்கா 16:20) அங்கு அனுபவிக்கப்போகிற கொடுமை தனிமையும் வேதனையும் மனிதனை மாற்ற அல்ல ஆனால் அவனைத் தண்டிக்கும்.

## நரகம் நம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட இடம்.

உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காக கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலன் அளிப்பார். (ரோமா் 2:5-.6)

நரகத்துக்கும் சொர்கத்துக்கும் போகிற முடிவு மனிதனின் கையிலிருக்கிறது. இயேசுக்கிறிஸ்துவை அவர் வாழ்ந்த காலத்தில் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்மேல் கடவுளின் கோபாக்கினை வந்தது ஏனென்றால் அவர்கள் அநீதியைத் தெரிந்து கொண்டார்கள். அவர்கள் கடவுளின் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் கடவுள் இல்லாமல் வாழ விரும்பினார்கள் ஆதலால் கடவுள் அவர்களின் முடிவை ஏற்றுக்கொண்டார். கடவுள் அநீதியுள்ளவர் என்று நம்மால் சொல்ல முடியாது ஏனென்றால் அவர் அந்தத் தருணத்தை நமக்குத் தந்துள்ளார்.

### பயமுறுத்துதலா அல்லது அன்பா.

“பாவம்” மற்றும் “நரகம்” என்ற வார்த்தைகளை வைத்து கிறிஸ்தவர்கள் பயமுறுத்துகிறார்கள் என்று பலர் சொல்லுகிறார்கள். கடவுள் என்னத்தைச் செய்யவேண்டும்? மனிதர்கள் நித்திய அழிவைநோக்கி போகிறதை அவர் பார்க்கவேண்டுமா? இதுதான் உண்மையான அன்பா? வேதம் அவருடைய நோக்கத்தை தெரியப்படுத்துகிறது: நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களை கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு. (வெளி 3:19) நரகத்தைக் காரணமாய் வைத்து நம்முடைய வாழ்க்கையைப்பற்றி நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

# 8. மதபக்தி மாத்திரம் போதாது

## இயேசுகிறிஸ்து தான் முக்கிய திறவுகோல்

### நாம் தீராத மதபக்தியுள்ளவர்கள்.

அனைத்துக் கலாச்சாரங்களிலும் மனிதன் சமாதானமாயிருப்பதற்குக் கடவுளை ஆசையுடன் பல முயற்சிகளில் தேடுகிறான். அவன் அந்த ஆசையை உலகத்திலுள்ள மத வழிபாடுகளிலும் தேடுகிறான் குறிப்பாக படைத்தவரையல்ல தன்னால் படைக்கப்பட்டவைகளைப் பணிந்து கொள்ளுகிறான். அதுமாத்திரமல்ல சூரியன் சந்திரன் நட்சத்திரங்களையும் மிருகங்களையும் மனிதன் பணிந்துகொள்ளுகிறான். நான் பார்த்தேன் அவர்களில் அறிவிக்கிறவன் ஒருவனும் இல்லை. நான் கேட்குங்காரியத்துக்குப் பிரதியுத்தரம் கொடுக்கத்தக்க ஒரு ஆலோசனைக்காரனும் அவர்களில் இல்லை. இதோ, அவர்கள் எல்லாரும் மாயை, அவர்கள் கிரியைகள் விருதா. அவர்களுடைய விக்கிரகங்கள் காற்றும் வெறுமையுந்தானே. (ஏசாயா 41:28-29)



## மதபக்தி பாவத்தைப் போக்காது.

மதஜக்கியங்கள் மனிதன் கடவுளோடு கிட்டிசேர உதவிசெய்கிறது. ஆனால் எப்பொழுது மதங்கள் நம்முடைய சொந்த முயற்சியால் இரட்சிப்பை அடையவேண்டும் என்று எதிர்பார்க்கும்போது அது வீணாகி விடும். நம்முடைய பக்திவிருத்தி பூரணமில்லாதது அது கடவுளுக்கு முன்பு நம்முடைய பக்திவிருத்தி முழுமையற்றது. கடவுள் முழுமை யை எதிர்பார்க்கிறார். மனித முயற்சியாலும் பக்தியுள்ள செயல்களாலும் நம்முடைய பாவங்களைப் போக்க முடியாது.

## நல்லசெயல்கள் நம்முடைய கெட்ட செயல்களைச் சரிபடுத்த முடியாது.

இயேசுக்கிறிஸ்துவின் இரட்சிப்பை விசுவாசிக்கும்போது நம்மால் கடவுளை கிட்டிச் சேரமுடியும். ஒருவரும் பெருமைபராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எசேியர் 2:9)

## பக்திவிருத்தி நம்முடைய பாவசுபாவத்தை மாற்றாது.

நம்முடைய பக்தி பெரிய பிரச்சனை அல்ல, ஆனால் அது ஒரு அறிகுறியாய் இருக்கிறது. நாம் ஆலயத்துக்குச் செல்வதோ அல்லது பக்தியுள்ள நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்போது அது நம்மை ஒரு வகையில் சந்தோஷப்படுத்துகிறது. ஆனால் அது நம்முடைய அடிப்படை நிலையை மாற்ற முடியாது. அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறபிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவரும் இல்லை. (யோபு 14:4)

## மிகவும் நல்லது - ஆனால் போதுமானது அல்ல.

ஆலயத்துக்குப்போவது அல்லது வேதம் வாசிப்பது தவறல்ல. வேதம் வாசிப்பது அல்லது ஆலயத்துக்குப்போவது தேவன்தாமே செய்யச்சொல்கிறார். ஆனால் இந்தப்பயிற்சிகள் நம்மை கிறிஸ்தவர்களாக மாற்றமுடியாது.

# 9. கடவுள் நம்மோடு தொடர்பு கொள்ளுகிறார்

## இயேசுக்கிறிஸ்து தன்னுடைய தனித்துவத்தை காண்பிக்கிறார்

நாங்கள் எங்கள் சொந்த நடவடிக்கைளாலும் முயற்சிகளாலும் நம்மை இரட்சிக்கமுடியாது. நாம் எப்படிச் சொர்க்கத்துக்குப் போக முடியும்? மனிதனுக்கு வேறே வாய்ப்பு இல்லையா? இந்தக் கேள்விக்கான பதில் இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தில் உள்ளது, அவர் மரிக்கும்போது என்ன நடந்து என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இயேசுக்கிறிஸ்துவின் மரணம் மனிதனுக்கு ஏன் முக்கியமானது?



### கடவுள் நீதியும் பரிசுத்தமும் ஆனபடியால் அவர் நம்முடைய பாவங்களை தண்டிக்க வேண்டும்.

வேதம் இவ்வகையாகக் கூறுகிறது: தேவன் அன்பாகவே இருக்கிறார். (1.யோவான் 4:8) கடவுள் பாவத்தை வெறுக்கிறார் ஆனாலும் அவர் பாவிகளை நேசிக்கிறார் மற்றும் மன்னிக்க விரும்புகிறார். கடவுளின் நீதி நம்முடைய ஆன்மீக மற்றும் உடல் மரணத்தை எதிர்பார்க்கும்போது எப்படி நாம் மன்னிக்கப்படலாம்? கடவுளால் மாத்திரம் இந்தப்பிரச்சனையை தீர்க்க முடியும், அதை அவர் இயேசுக்கிறிஸ்து மூலமாய் செய்தார். பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். (1.யோவான் 4:14)

### கடவுளுடைய குமாரன் மனிதனானார்.

இயேசுக்கிறிஸ்து முழுமையாய் மனிதனாய் இருந்தாலும் அவர் அதே சமயத்தில் கடவுளாயிருந்தார். ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோசெயர் 2:9) இயேசுக்கிறிஸ்து விசேஷித்தமானவர். வேதம் இதை அடிக்கடி கூறுகிறது.

### அவருடைய பிறப்பு விசேஷித்தமானது.

அவருக்கு மனுஷீகத் தந்தை இல்லை. பரிசுத்த ஆவியின் வல்லமை மூலமாக இயேசுக்கிறிஸ்து ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்தார். தேவதூதன் பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம்

உன்மேல் நிழலிடும் ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவ-னுடைய குமாரன் எனப்படும். (லூக்கா 1:35)

## அவருடைய வார்த்தை விசேஷித்தமானது.

அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 4:32)

## அவருடைய அதிசயங்கள் விசேஷித்தமானது.

மனிதர்கள் இயேசுக்கிறிஸ்துவின் அதிகாரத்தைக் கேள்வி கேட்கும்போது அவர் தாம் செய்த அதிசயங்களை சுட்டிக்காட்டினார். குருடர்கள் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள். (மத்தேயு 11:5)

## அவருடைய வாழ்க்கை விசேஷித்தமானது.

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவ-மில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார். (எபிரெயர் 4:15) வேதத்தில் பார்க்கிறோம், இயேசுக்கிறிஸ்து மனிதனாக கடவுளுடைய கட்டளைகளை முழுமையாகக் கைக்கொண்டார். அதனால் அவர் பாவதிற்காகத் தண்டனையை அனுபவிக்கவேண்டிய அவசியமேயில்லை. இருப்பினும் அவரை தவறாகக் குற்றஞ்சாட்டி கைது செய்தார்கள். தவறான சாட்சிகளை காரணமாக வைத்து இயேசுக்கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் அவருடைய மரணம் தற்செயலான விபத்து அல்ல. அப்படியிருந்தும் தேவன் நிர்ணயித்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்து கொலை செய்தீர்கள். (அப்போஸ்தலர் 2:23) கடவுள் தன்னுடைய சொந்தக்குமாரனை ஒரு நோக்கத்துடன் அனுப்பினார். அவர் நம்முடைய பாவத்தின் தண்டனையை ஏற்றுக்கொள்ளவே வந்தார். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படிவராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். (மத்தேயு 20:28)

## அவருடைய மரணம் விசேஷித்தமானது மற்றும் நமது வாழ்க்கைக்கு முக்கியமானது.

இயேசுக்கிறிஸ்துவின் இரட்சிப்பின் வழியை சுருக்கமாக இந்த வேதவார்த்தை சொல்லியிருக்கிறது: தேவன் தம்முடைய ஓரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)

# 10. கடவுளின் அன்பைக் காணமுடியும்

## இயேசுக்கிறிஸ்து நமக்காய்த் தன்னை ஒப்புக்கொடுத்தார்

இயேசுக்கிறிஸ்துவைப் பற்றி அநேகம் சொல்லலாம் குறிப்பாக அவர் செய்த அதிசயங்கள் அவருடைய முன் மாதிரியான வாழ்க்கை மிக மேன்மையானது. ஆனால் கடைசியில் எல்லா அறிக்கைகளும் அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றிச் சொல்கிறது. வேதம் இரண்டு சம்பவத்துக்கும் ஏன் மிகப்பெரிய முக்கியத்துவத்தை கொடுக்கிறது? பதில்: அவர் நமக்காய் நம் பாவங்களுக்காய் அனைத்தையும் தன் மேல் ஏற்றுக்கொண்டு நம்மை இரட்சித்தார்.



### இயேசு நமக்காய் மரித்தார்.

மனிதர்கள் கடவுளின் பரிசுத்தத்திற்கு முன்பாக குற்றவாளிகள் மற்றும் நம்பிக்கையற்றவர்கள். ஏனெனில் கடவுள் ஒவ்வொரு பாவத்துக்கும் சரியான தண்டனையைக் கொடுக்கிறார். ஆனால் அவர் நம்மைத் தண்டிக்கவில்லை எனெனில் வேதத்தில் அவர் ஒரு வழியைக் காண்பிக்கிறார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8) இந்த அற்புதமான மீட்புக்காகக் கடவுளின் குமாரன் தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர் நமக்காக நம் பாவங்களுக்காக மரித்தார். ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர் களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார், அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். (1.பேதுரு 3:18) இதுவே கடவுளின் அன்பைக்காண்பிக்கிறது.

### இயேசு நம் பாவங்களைச் சுமந்தார்.

இங்கே நாம் கடவுளின் பரிசுத்தத்தைப் பார்க்கிறோம். இயேசு மிகக்கொடுரமான வேதனைகளை அனுபவித்தார். அவர் சிலுவையில் தொங்கும்போது இவ்வாறு கூறினார்: என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர். (மாற்கு 15:34) அந்தக் கொடுரமான நேரத்தில் பிதா தம்முடைய குமாரனை விட்டுவிலகினார். இயேசுக்கிறிஸ்து பிரிவின் தண்ட னையை அனுபவித்தார். அவர் தன்னை நமக்காய் ஒப்புக்கொடுக்கும்போது அவர் நம்முடைய பாங்களுக்காகப் பொறுப்பானார்.

## இயேசு நம்முடைய இரட்சிப்புக்காக மரித்தார்.

கடவுள் இயேசுக்கிஸ்துவை மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் அது மூலமாய் கடவுள் இயேசுவின் தியாகத்தை ஏற்றுக்கொண்டார். பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதெனன்று மரித்தேரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். (ரோமர் 1:5) அது மூலமாய் நரகத்துக்குப் போகவேண்டிய நம்மை மன்னிப்பின் அடிப்படையை வைத்து இரட்சித்தார்.

ஆனால் இதற்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? கடவுளோடு நாம் எப்படி ஒன்றித்திருக்கமுடியும்? இயேசுக்கிறிஸ்து எப்படி நம்முடைய சொந்த இரட்சகராய் ஆகமுடியும்?

# 11. என்னுடைய முடிவு

### இரட்சிப்பைத் தேடி

## நீங்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறீர்களா?

கடவுளோடு சமாதானத்துடன் வாழவிரும்புகிறீர்களா? கடவுள் நமக்கு அவசியம் தேவையான இரட்சிப்பைக் காண்பிக்கிறார். நாம் அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு மனந்திரும்ப வேண்டும். தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும்... (அப்போஸ்தலர் 20:21)

## மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் என்பது ஒரு புதிய வாழ்க்கையின் அணுகுமுறை. மனப்பான்மையின் மாறுதல் முக்கியமானது. நாங்கள் பாவிகள் என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். மற்றும் நாம் கடவுளுடைய அன்புக்கும் பரிசுத்தத்திற்கும் மாறாக நாம் நடந்து கொள்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இருதயத்திலும் ஒரு மாறுதல் காணப்படவேண்டும். நாம் செய்கிற பாவங்களைக்குறித்து ஒரு வெறுப்பும் ஒரு குற்ற உணர்ச்சியும் காணப்படவேண்டும். ஆனால் நாம் அத்தோடு நிறுத்தாமல் அந்தப் பாவத்தை விட்டு விலகவேண்டும் என்ற விருப்பம் நம்முடைய இருதயத்தில் இருக்கவேண்டும். நாம் ஒரு புதிய திசையை நோக்கி போகவேண்டும். கடவுள் மனிதனை மனந்திரும்பச் சொல்கிறார். அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பி குணப்படவும் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன். (அப்போஸ்தலர் 26:20)



*மனந்திரும்புதல் என்றால்: ஒரு புதிய திசையை நோக்கி.*

இருதயத்தின் ஆழத்திலிருந்து கடவுளுக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ முயற்சிக்கவேண்டும். இதன்பொருள் என்னவென்றால், முழு இருதயத்திலிருந்து இயேசு கிறிஸ்து தான் உண்மையான கடவுள் என்பதை அறிக்கை செய்யவேண்டும். நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். (மத்தேயு 16:16) இயேசு கிறிஸ்து நமக்காய் ஜீவனைக்கொடுத்தவைரை நாம் முழுமையாக விசுவாசிக்க வேண்டும். அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காய் மரித்தார். (ரோமர் 5:6)

## மனந்திரும்போது எதிர்ப்புகள் வந்து நேரிடும்.

நம்முடைய பெருமையும் நம்முடைய பாவ சுபாவமும் பக்கிவிருத்தி மேலும் சொந்த முயற்சிகள் மேலும் நம்பிக்கை வைக்கத்தூண்டும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் மேல் நம்முடைய நம்பிக்கையை மாத்திரம் வைக்க வேண்டும். எனென்றால் அவரால் மாத்திரம் தான் நம்மை இரட்சிக்க முடியும். மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்கவல்லவராயும் இருக்கிறார். (எபிரெயர் 7:25)

## விருப்பத்தைச் செயல்ப்படுத்தவேண்டும்.

இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிற விருப்பம் நமக்கு இருந்தால் நாம் அவரை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது? அவரை நாம் எப்படி ஏற்றுக்கொள்ளலாம்? நாம் கடவுள் முன்பு நாம் பாவிகளென்பதையும் நமக்கு இரட்சிப்பு அவசியம் என்பதையும் அறிக்கையிடவேண்டும். இயேசுக்கிறிஸ்து நம்மை இரட்சியும் என்று முழுஇருதயத்தோடு நாம் கேட்கவேண்டும். அவரை நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கும்போது அவர் நம்முடைய பாவங்களை மேற்கொள்ள உதவி செய்வார்.

## ஒரு நேர்மையான ஜெபம் இதுபோன்று இருக்கும்:

கடவுளே நான் நீர் இல்லாமல் வாழ்ந்தேன் மற்றும் பாவத்தால் உம்மைவிட்டுப் பிரிந்து இருந்தேன். என்னுடைய பாவங்களை மன்னியும். இயேசுவே நீர் எனக்காய் மரித்து மீண்டும் உயிரோடு எழுந்ததிற்காக நன்றி. இன்றைய நாளில் இருந்து  நீர் என்னுடைய வாழ்க்கையில் வரவேண்டும். உம்முடைய அன்புக்காக நன்றி. ஆமென்.

### கடவுள் வாக்கு மாறாதவர்.

என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9) யார் இயேசுக்கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டு அவரைக் கடவுள் என்று அறிக்கையிடும்போது நித்திய வாழ்வைச் சுதந்தரித்துக்கொள்ளலாம்.

# 12. புதிய வாழ்க்கையை அனுபவிக்கவும்

## கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல்ப்படிகள்

நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது ஒரு புதிய மனிதனானீர் கள். இந்த சம்பவத்தை ஒரு புதிய பிறப்பென்றும் கூறலாம். இந்தப் புதிய பிறப்பு மூலமாய் நமக்கும் கடவுளுக்கும் ஒரு புது உறவு உருவாகியது. வேதம் அதை நித்தியவாழ்வு என்று கூறுகிறது.

### கடவுளுக்கும் நமக்கும் இடையில் சமாதானம்.

இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துமூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1)

### இயேசுக்கிறிஸ்து மூலமாய் உங்களுடைய பாவங்கள் நீங்கியது.

அவரை விசுவாசிக்கிறவனெவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார்கள். (அப்போஸ்தலர் 10:43)



### கடவுளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)

## உங்கள் நித்திய வாழ்வு நிச்சயம்.

ஆனபடியால் கிறிஸ்து இயசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. (ரோமர் 8:1)

## கடவுள் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தில் நம்முடைய வாழ்கையில் வந்தார்.

நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பிரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். (எபேசியர் 1:13) உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர இந்த நான்கு குறிப்புகள் அவசியம்.

## ஜெபம் - நீங்கள் தினம் தோறும் கடவுளோடு பேசுங்கள்.

நாம் கடவுளோடு பேசும்போது அவர் சந்தோஷமடைகிறார். ஏனென்றால் ஒரு தந்தையாக அவர் உங்கள் வாழ்க்கையில் மேல் அக்கறை காட்டுகிறார். அவரோடு உங்கள் குடும்பத்தைப் பற்றி உங்கள் வேலையைப் பற்றி உங்கள் கவலைகளைப்பற்றி மற்றும் உங்கள் விருப்பங்களைப்பற்றி பேசலாம். அவருடைய இரக்கத்திற்காக நன்றி சொல்லுங்கள் நீங்கள் தப்பு செய்யும்போது அவரிடம் மன்னிப்பு கேளுங்கள். கடவுள் உங்கள் ஜெபத்தை நிச்சயம் கேட்பார் உங்களை மன்னிப்பார் மற்றும் உங்களுக்கு ஒத்தாசை யாயிருப்பார். அவரிடம் நீங்கள் தினமும் மன்னிப்பு கேட்கலாம். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1.யோவான் 1:9) ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திலோ நீங்கள் ஜெபம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஜெபத்தின் மூலமாய் அவரின் சத்தத்தைக்கேட்க முடியும். ஜெபத்தில் கடவுள் நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

## வேதம் - கடவுளின் வார்த்தை நம் வாழ்வின் அடிப்படை.

தன்னுடையு விருப்பங்களை கடவுள் நமக்கு தெரிவிக்க விரும்புகிறார். கடவுளின் குரலை வேதம் வாசிக்கும் போது கேட்கலாம். வேதத்தின் மூலமாய் நாம் அவரை தெரிந்து கொள்ளவும் அவருடைய திட்டங்களைப் புரிந்து கொள்ளமுடியும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். (எபேசியர் 5:10) பரிசுத்தஆவியானவர் நாம் வேதத்தை வாசிக்கும்போது நம்மை நடத்துவாராக.



## ஐக்கியம் - உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு ஒத்தாசை செய்யும் கிறிஸ்தவர்-களைத் தேடுங்கள்.

நாம் தனியாக நம்முடைய வாழ்வில் போராடவேண்டும் என்ற அவசியமில்லை, அதைக் கடவுள் விரும்பவும் இல்லை, மற்றக் கிறிஸ்தவர்களிடம் நாம் பலதைக் கற்றுக்கொள்ளலாம். அவர்களோடு ஜெபம் செய்யலாம் வேதம் வாசிக்கலாம் ஒன்று சேர்ந்து சுவிசேஷம் சொல்லலாம். ஆதலால் தேவ ஆலயத்துக்கு போக வேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால் மற்றக் கிறிஸ்தவர்களின் ஜக்கியம் நமக்கு அவசியம். தேவ ஆலயத்தில் கடவுள் நமக்குத் தந்த தாலந்துகளை மற்றவர்களுக்காகப் பயன்படுத்த முடியும். சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்குகொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திசொல்லவேண்டும். (எபிரெயர் 10:25)

## சேவை - மாறிய வாழ்க்கையின் மூலம் கிறிஸ்தவன் என்று காண்பியுங்கள்.

இப்பொழுதும் இஸ்ரவேலே நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளெல்லாம் நடந்து அவரிடத்தில் அன்பு கூர்ந்து உன் முழு இருதய த்தோடும் உன் முழுஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து (உபாகமம் 10:12) நாம் கடவுளை மகிழ்விக்கும் ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும். இதுதான் நம்முடைய நோக்கமாயிருக்க வேண்டும். நாம் நம்முடைய தாலந்துகளைக் கடவுளின் சேவைக்கு ஒப்புவிக்கவேண்டும். ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கைகளாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10) கடவுள் நம்முடைய வாழ்க்கையில் செய்த பல நன்மைகளை உலகமெங்கும் கூறுவோமாக. இது நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை மாத்திரமல்ல, ஒரு மிக சந்தோஷமான அனுபவம். நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1.பேதுரு 2:9)

# Impressum

## Aktion: In jedes Haus e.V. (AJH)

**Hausanschrift:**
Telegrafenstraße 25
42477 Radevormwald

**Postanschrift:**
Postfach 1120
42460 Radevormwald

**Telefon:** +49 (0)2195-91560
**E-Mail:** ajh@ajh-info.de
**Internet:** www.ajh-info.de
**Evangelistische Seite:** www.entdecke-neues.de
**Internationaler Glaubensgrundkurs:** www.the-good-news.de

**Bildnachweis:**
Titelbild: Fotolia-66424228-iordani
Lektion 1: pixabay-804939; Lektion 2: pixabay-787253; Lektion 3: pixabay-113401
Lektion 3: pixabay-419057; Lektion 4: pixabay-430557: Lektion 5: pixabay-764983
Lektion 6: pixabay-665591; Lektion 7: pixabay-58212; Lektion 8: pixabay-169238
Lektion 9: fotolia-66892376-©Romolo Tavani; Lektion 10: fotolia-76972189-©Alberto Masnovo; Lektion 11: fotolia-82725689-©Gina Sanders; Lektion 12: fotolia-66573128-©vinogradov_il; Lektion 12: fotolia-78455410-©mariesacha

Copyright © „Aktion: In jedes Haus“, Radevormwald. Sprache: Tamil